**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 413 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 5** |
| **Name** | : | திரு. பெரியாண்டி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.12.2023**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் உசிலம்பட்டி தாலுகா, தொட்டப்பநாயக்கனூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் எனது பக்கத்து தோட்டத்துக்காரர். அசா4.உமாராணியைத் தெரியும். சண்டை நடந்ததாக சொன்னார்கள். அதற்கு சாட்சியாக இருக்கும்படியும் சொன்னார்கள். ஆனால் சண்டை நடந்த போது நான் அங்கு இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 12.09.2016 ம் தேதி 14.00

மணிக்கு அசா4 ன் தோட்டத்தில் அவரது அம்மா பார்வதி, பேச்சியம்மாள், பூங்கொடி ஆகியோர் தோட்டத்துவீட்டில் இருந்த போது எதிரி அத்து மீறி உள்ளே சென்று அங்கு இருப்பவர்கள் பெண்கள் என்றும் பாராமல், அவர்களைப் பார்த்து தேவிடியா, கண்டாரஓலிகளா, என்று அறுவருப்பாகத் திட்டியும் இரும்பு கம்பியால் வீட்டின் முன்புறம் அமைக்கப்பட்டிருந்த மண் அடுப்பு, வீட்டு உபயோகத்திற்குப் பயன்படும் பண்ட பாத்திரங்கள், கட்டில், பிளாஸ்டிக் வாளி ஆகியவை ரூ.5000/- மதிப்புள்ளவற்றை உடைத்து சேதப்படுத்தியும், தடுக்ககச் சென்ற பார்வதியையும், பூங்கொடியையும் பிடித்து கீழே தள்ளியும் அவர்களைப் பார்த்து தோட்டத்தில் குடியிருந்தால் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், அதை பக்கத்துத் தோட்டத்துக்காரர் என்ற நிலையில் நான் கேள்விப்பட்டதாகவும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரி பக்கத்து தோட்டத்துக்காரர் என்றும் அதனால் எதிரியைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மைக்குப் புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>

எனது தோட்டத்திற்கு பக்கத்து தோட்டத்தில் எதிரி தான் விவசாயம் செய்தார் என்றால் இவர் கொஞ்சநாளும், அசா4 உமாராணி கொஞ்சநாளும் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை